தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற தேன்கனிக்கோட்டை பகுதி, கிட்டத்தட்ட ஓசூருக்கு அருகில் இருப்பதால், அங்கே கூடுதலாக பாடப் பிரிவுகளும், கூடுதல் கட்டமைப்பு வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியிலுள்ள அனைத்து மாணவர்களும் கல்லூரியில் சேர்க்கை பெறுகின்ற வகையில், பாடப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டு, அவர்கள் உயர் கல்வி பெறுகின்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தேன்கனிக்கோட்டை பகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றைத் தோற்றுவிக்கின்ற வாய்ப்பு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே ஏற்கெனவே பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, தேன்கனிக்கோட்டை பகுதியில் மாணாக்கர்களுடைய சேர்க்கை சதவிகிதம் அதிகரிக்கின்றபட்சத்தில், அந்தப் பகுதியில் புதிதாக ஒரு கல்லூரியைத் தோற்றுவிப்பதற்கு மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசானது பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 151, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

151—

கால்நடைக் கிளை நிலையம்

***50920—திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதி, வேப்பம்பட்டி ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2020 மார்ச் 21]

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், கம்பம் தொகுதி, வேப்பம்பட்டி ஊராட்சியில் மாட்டினங்கள் 380 அலகுகளும், ஆட்டினங்கள் 84 அலகுகளும் மற்றும் கோழியினங்கள் 10 அலகுகளும், அனைத்தையும் சேர்த்து 474 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க குறைந்தது 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய வேப்பம்பட்டி ஊராட்சியில், புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு, மூன்றாண்டுகளில் முத்தான சாதனைகள் பல படைத்து, பல்வேறு துறைகளில் இன்றையதினம் தமிழகம் இந்தியாவிலேயே முதலிடம் என்கின்ற சாதனையை படைத்து வருகின்ற குடிமராமத்து நாயகன், காவேரி காப்பாளர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அருமை அண்ணன் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருக்கின்ற ஜல்லிக்கட்டு நாயகர், அன்பின் மறுஉருவம், பொறுமையின் சிகரம், தேனி தந்த தங்கம், எங்களுடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் உட்பட அனைத்து அமைச்சர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், எனது வாழ்த்துக்களையும், நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் நமது தமிழக அரசு சாதனை படைக்கின்ற வகையில், உலகத் தரம்வாய்ந்த கால்நடைப் பூங்காவை சேலத்தில் அமைத்திருக்கின்றது. தேனி மாவட்டத்தில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்கிட அனுமதி வழங்கியமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல், தேனி மாவட்டத்தில் புதிய கால்நடை மண்டல அலுவலகம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கியமைக்காகவும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது கம்பம் சட்டமன்றத் தொகுதி என்பது, விவசாயிகள் அதிகமாக இருக்கின்ற தொகுதியாக

இருக்கின்றது. கால்நடைகள் மிக அதிகமாக இருக்கின்ற இந்தத் தொகுதியில், நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வேப்பம்பட்டி ஊராட்சியில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வாய்ப்பு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அனுமந்தன்பட்டி பேரூராட்சியிலும், எரசக்கநாயக்கனூர் ஊராட்சியிலும் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வேண்டும் என்ற எனது கோரிக்கையினை வைக்கின்றேன். கம்பம் தொகுதி என்பது கேரள மாநில எல்லையில் அமைந்திருக்கின்ற பகுதியாகும். அங்கே உள்ள மக்கள் அடிக்கடி கேரளாவிற்குச் சென்று வருகின்றார்கள். பறவைக் காய்ச்சல் போன்ற நோய்கள் எல்லாம் பரவ வாய்ப்பிருக்கின்ற காரணத்தினால், கம்பம்மெட்டில் சோதனைச் சாவடியும், கால்நடை மருந்தகம் ஒன்றையும் அமைத்திட வேண்டும் என்ற கோரிக்கையினை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வேண்டுகோளாக முன்வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் தொகுதி, வேப்பம்பட்டி கிராமத்திலிருந்து பூமலைக்குன்று கால்நடைக் கிளை நிலையம் மூன்று கிலோ மீட்டர் தொலைவிலும், சீல்யம்பட்டி கால்நடைக் கிளை நிலையம் ஐந்து கிலோ மீட்டர் தொலைவிலும், காமாட்சிபுரம் கால்நடை மருந்தகம் 4 கிலோமீட்டர் தொலைவிலும் செயல்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல், கம்பம் தொகுதியில் ஒட்டுமொத்தமாகப் பார்த்தீர்களென்றால், 27,000 மாட்டினங்கள், 38,000 ஆட்டினங்கள் மற்றும் 1,28,000 கோழியினங்கள் உள்ளதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு மருத்துவம் மற்றும் இனப்பெருக்கச் சேவைகள் வழங்கிட 10 கால்நடை மருந்தகங்களும், 15 கால்நடைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடைக் கிளை நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கின்ற அனுமந்தன்பட்டி மற்றும் எரசக்கநாயக்கனூர் பகுதிகளில் கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகளை அனுப்பி, தேவைப்படின் அங்கு புதிய கால்நடைக் கிளை நிலையங்களை அமைப்பதற்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, நிதிநிலைக்கேற்ப பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைக் கிளை நிலையம் அமைக்க பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். சின்னமனூர் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் ஒன்று தற்போது செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. அதனை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரவேண்டும் என்ற கோரிக்கையினைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சின்னமனூர் ஊராட்சியில் உள்ள கால்நடை மருந்தகத்தினை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரவேண்டும் என்ற கோரிக்கையினை வைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, தேவைப்படின், நிதிநிலைக்கேற்ப பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 152, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.